தொழிலாளர்களாகத் தேர்வின்றி அல்லது நேர்முகத் தேர்வின்றி ஏற்றுக்கொள்வதில்லை. நேர்முகத் தேர்வின்பொழுது தகுதி யானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் தகுதியின் அடிப் படையிலே.

சம்பந்தப்பட்ட ஆலைகளுக்கு நிலம் கொடுத்தவர்கள் என்ற அந்த அடிப்படையிலே முன்னுரிமையும் அவர்களுக்கென்று வழங்கப்பட்டு அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள், தினக்கூலிகளாகப் பணிபுரிபவர்களை நிரந்தர மாக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். வடார்க்காடு மாவட்டத்தில் மட்டுமல்லாமல், சென்னையைச் சுற்றியிருக்கின்ற பல சிறு தொழில் நிறுவனங்களில் பணியாற்றுபவர்களில் எவ்வளவு பேர் தினக்கூலிகளாக இருக்கிறார்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி திருப்பத்தூர் சர்க்கரை ஆலையைப் பற்றியது.

பெரம்பலூர் சர்க்கரை ஆலை.

*வினா எண் 78— திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரம்பலூர் சர்க்கரை ஆலை 30–9–1979 முடிய வரவு செலவு கணக்கில் சுமார் 53 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மையா?

(ஆ) நஷ்டம் ஏற்பட்டதற்கான காரணத்தை அரசு ஆராய்ந்ததா?

(இ) ஆம் எனில் அது பற்றிய நடவடிக்கை என்ன?

(ஈ) இந்த ஆலையிலிருந்து கிடைக்கும் இதர உப பொருள் கள் என்னென்ன?

(உ) இந்த உப பொருள்கள் விற்பனையில் லாபமா? நஷ்டமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) நஷ்டம் வியாபார ரீதியானது. எனினும் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஈ) சர்க்கரைக் கழிவுப்பாகு, கரும்புச் சக்கை மற்றும் கழிவு மண் ஆகியவையாகும்.

(உ) முக்கிய உப பொருளான கழிவுப்பாகு அரசு நிர்ண யித்த விலையில் விற்கப்படுகிறது.

TRUTH ALONE TRIUMPHS

1981 ஆகஸ்டு 26]

திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ் நாட்டில் அரசு நடத்தும் ஆலைகள் எத்தனை? எந்தெந்த ஆலைகளில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது? அந்த நஷ்டத்தைச் சரிக்கட்ட அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 11 சர்க்கரை ஆலைகள்—9 கூட்டுறவுத் துறையிலும், 2 அரசு பொதுத் துறையிலும்—நடந்து வருகின்றன. மூலக் கேள்வி பெரம்பலூர் சர்க்கரை ஆலையிலே 30–9–1979 வரை ஏற்பட்ட நஷ்டம் பற்றியது. அந்த ஆலையைப் பற்றியே கூட இன்றைய வரை உள்ள நிலையைக் கேட்கவில்லை, 1979 வரைதான் கேட்டிருக்கிறார். மற்ற ஆலைகளில் ஏற்பட்டுள்ள நஷ்டம் பற்றித் தனியாகக் கேட்டால், அது பற்றிய விவரம் சேகரித்துத் தரப்படும்.

டி. ஆலங்குளம் அரிசன காலனிக்கான மேம்பாட்டுத் திட்டங்கள்.

*வினா எண் 79—திரு. க. பாரமலை: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த டி. ஆலங்குளம் அரிசன காலனிக்கு ரோடு போட, பாலம் அமைக்க, தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமென கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) முன்னாள் மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் டி. ஆலங்குளம் ஆதிதிராவிடர் குடியிருப்பை பார்வையிட்ட சமயம் அக்குடியிருப்பில் உள்ள ஆதிதிராவிடர்கள் கேட்டுக்கொண்டதின் பேரில் பாலமும், தடுப்புச் சுவரும் கட்டவேண்டிய அவசியம் என்று தெரிந்ததால் அக்குடியிருப்பிற்கு அருகே ஓடும் கால்வாயின் குறுக்கே ஒரு பெரிய பாலமும் 100 மீட்டர் நீளமுள்ள மண்கூரை மற்றும் தடுப்புச் சுவரும் ரூ. 45,000 செலவில் கட்ட ஆதிதிராவிடர் நல இயக்குநர் கருத்துரு ஒன்று அரசுக்கு அனுப்பியுள்ளார்.

(ஆ) இக் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் டி. ஆலங்குளம் கிராமத்தில் ரூ. 45,000 மதிப்பீட்டில் வேலை செய்கின்ற குறிப்பு அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். 1979 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் பொழுது, 3 நாட்கள் அந்தக் கிராமம், வெளி உலகத்தோடு தொடர்பில்லாமலே, ஹெலிகாப்டர் மூலமாக அவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் போடக் கூடிய நிலை இருந்தது. அதைக் கருதி இரண்டு